அனைவருக்கும்

# நலவாழ்வு

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மாத இதழ்

February 2015 : Volume 1 Issue 2

www.tn.gov.in www.tnhealth.org


## தொலைநோக்குத் திட்டம்

## 2023

## வழிகாட்டுதலில் உலகத் தரமான மருத்துவ சேவைகள்






## மேன்மையான மருத்துவக் கல்வி!
## உன்னதமான நவீன மருத்துவ சிகிச்சை!




## அனைவருக்கும்

# நலவாழ்வு

## தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்
## 2023

**பேறு காலங்களில்**
**குழந்தைகளை ஈன்றெடுப்பதில்**
**அனைத்து பெண்களுக்கும் உரிய சமமான கண்ணியமிக்க,**
**சமூக நீதியுடன் கூடிய தாய் சேய் நல சுகாதார சேவைகள்**
**மற்றும் பேறுக்கு பிந்தை சேவைகளும்**
**எளிதில் கிடைக்கும் வண்ணம்**
**உயர்தர மருத்துவ வசதிகள் அமையப் பெற வேண்டுமென**
**தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது.**






# உலகத்தரம் வாய்ந்த உயரிய மருத்துவ சேவை

நம் மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை தமிழக மக்களின் நலன் காக்கும் ஏராளமான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திவருகிறது. அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் கொண்டு வந்த அனைத்துத் திட்டங்களையும் இன்று உலக நாடுகள் உற்று நோக்கிப் பாராட்டுகின்றன.


தமிழ்நாடு வளர்ந்த நாடுகளுக்கு இணையான சுகாதாரத்தை அடைய வேண்டும் என்பது புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023இன் குறிக்கோளாகும்.

'மேன்மையான மருத்துவக் கல்வி' 'உன்னதமான நவீன மருத்துவ சிகிச்சை' என்ற தாரக மந்திரங்களை சாதிக்கும் நோக்கத்துடன், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் பன்னோக்குத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

## மேன்மையான மருத்துவக் கல்வி

தகுதி வாய்ந்த மருத்துவர்களால் தமிழ்நாட்டு மக்களுக்கு சுகாதாரச் சேவைகள் வழங்கப்படவேண்டும் என்பது அரசின் முன்னுரிமை தரும் நடவடிக்கைகளில் ஒன்றாகும். தற்போது 17 மாவட்டங்களில், 19 அரசு மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.






# உலகத்தரம் வாய்ந்த உயரிய மருத்துவ சேவை

நம் மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை தமிழக மக்களின் நலன் காக்கும் ஏராளமான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திவருகிறது. அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் கொண்டு வந்த அனைத்துத் திட்டங்களையும் இன்று உலக நாடுகள் உற்று நோக்கிப் பாராட்டுகின்றன.

தமிழ்நாடு வளர்ந்த நாடுகளுக்கு இணையான சுகாதாரத்தை அடைய வேண்டும் என்பது புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023இன் குறிக்கோளாகும்.

'மேன்மையான மருத்துவக் கல்வி' 'உன்னதமான நவீன மருத்துவ சிகிச்சை' என்ற தாரக மந்திரங்களை சாதிக்கும் நோக்கத்துடன், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் பன்னோக்குத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

## மேன்மையான மருத்துவக் கல்வி

தகுதி வாய்ந்த மருத்துவர்களால் தமிழ்நாட்டு மக்களுக்கு சுகாதாரச் சேவைகள் வழங்கப்படவேண்டும் என்பது அரசின் முன்னுரிமை தரும் நடவடிக்கைகளில் ஒன்றாகும். தற்போது 17 மாவட்டங்களில், 19 அரசு மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

இத்தகைய மருத்துவக் கல்லூரிகளில் மிகச்சிறந்த கட்டமைப்புகள், மருத்துவக் கருவிகள் ஏற்படுத்தப்பட்டு, மேன்மையான மருத்துவக் கல்வியும், அங்கு வரும் நோயாளிகளுக்கு நவீன மருத்துவ சிகிச்சை வசதிகளும் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளன.

## உன்னதமான நவீன மருத்துவ சிகிச்சை

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இல்லாத மாவட்டங்களில், அரசு மருத்துவமனைகளையே பெரிதும் நம்பியிருக்கும் ஏழை, எளிய மக்கள் அருகில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளையே நாட வேண்டியுள்ளது. இதனை கருத்தில் கொண்டு, அத்தகைய 15 மாவட்டங்களில் உள்ள மாட்டத் தலைமை மருத்துவமனைகள் உட்பட 16 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

## பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை

மாநிலத்தில், கடுமையான நோய்களால் பாதிக்கப்படும் ஏழை எளிய மக்களுக்கு சிறந்த வல்லுநர்களைக் கொண்டு, உயர் சிகிச்சை அளிக்கும் வகையில் மருத்துவக் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில், ஏற்கனவே இருந்த புதிய கட்டடத்தை மாற்றி, தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை நிறுவப்பட்டுள்ளது. இந்த சிறப்பு மருத்துவமனையில் 9 உயர் சிறப்புப் பிரிவுகள் 400 படுக்கைகளுடன் செயல்பட்டு வருகிறது.

## மருத்துவக்காப்பீடு

தமிழகம் முழுவதும் பல்வேறு மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் மருத்துவ நிலையங்கள் மூலமாக நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை சேவைகளை அரசு வழங்கி வருவதோடு மருத்துவத் துறையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தை, பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் மிகச் சிறந்த முறையில் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் தொற்று மற்றும் தொற்றா நோய்களைத் தடுப்பதிலும், கட்டுப்படுத்துவதிலும், சிகிச்சை அளிப்பதிலும் தமிழகம் முன்மாதிரியாகத் திகழ்கிறது.



**டாக்டர் சி.விஜயபாஸ்கர்**
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

# HEALTH FOR ALL



**Dr J Radhakrishnan IAS**
Health Secretary, Tamilnadu

***'Health for all' is the primary theme of Government of Tamil Nadu. Tamil Nadu is the leader and beacon holder when it comes to health. What Tamil Nadu implements now other states catch up 5 years later.***

### Millennium Development Goals

Tamil Nadu is one of the very few states which have achieved the Millennium Development Goals on reproductive and child health care. Tamil Nadu has used every challenge as an opportunity to address health issues. Tamil Nadu has made considerable progress in health indicators during the past few years.

### Health Insurance

One of the pioneering schemes is bringing in a robust PPP through the health insurance scheme which is now covering about 769 hospitals. TN is the only state where anyone can access and free services is provided to all.

### Control of Diseases

The state has been in the forefront in control of communicable and non communicable diseases. Tamil Nadu has also reduced the prevalence rate of HIV/AIDS to 0.25. Tamil Nadu reduced IMR by 50% i.e. from 43 per 1000 live births in 2003 to 21 per 1000 live births in 2013.

### Innovative schemes

For antenatal care several new and innovative schemes have been created by Government of Tamil Nadu. Tamil Nadu provides Rs. 12000 for pregnant women in 3 instalments - Rs.4000 at the time of registering in a government institution, for antenatal care, Rs.4000



for delivering in a govt hospital and Rs.4000 towards taking immunization shots for the child.

The Tamil Nadu delivery models have been studied all over India and the focus of this government on women's health, new born screening and new initiatives are lauded by all other states in India.

## Cadaver organ transplants

Tamil Nadu is a role model for other states in organ donations. From October 2008, 606 cadaver organ transplants, 1085 kidney transplants, 554 liver transplants and 120 heart transplants have been performed in our state. Majority of the cadaver donations come from Tamil Nadu.

## Drugs system

Tamil Nadu took the lead in providing universal health coverage by setting up an effective drugs procurement and distribution mechanism since 1994. Its IT enabled supply chain management system ensures delivery to needy patients, transparency to prevent misuse and stringent quality control to eliminate spurious drugs.

It is widely recognized that good public health services is a key to improving health outcomes. Tamil Nadu's health care system has become a role model for other states because it has achieved universal health care.



# வேலூர் அரசு மருத்துவமனையில் அம்மா குழந்தைகள் வார்டு

## வீட்டில் இருக்கும் உணர்வை ஏற்படுத்தும் சூழல்



தமிழகத்தில் முதல் முறையாக வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 'அம்மா குழந்தைகள் வார்டு' திறக்கப்பட்டது.

வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின்கீழ் ரூ.7 இலட்சம் செலவில் இந்த வார்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 20 படுக்கைகள் வசதி கொண்ட இந்த அறை முழுவதும் குளிர்சாதன வசதி கொண்டது,

பிறந்து 1 மாதம் முதல் 12 வயது வரையிலான சிறுவர் சிறுமிகளுக்கு இங்க சிகிச்சை அளிக்கப்படும். மருத்துவமனையில் இருப்பதுபோன்ற உணர்வு குழந்தைகளுக்கு ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தில் உருவாக்கியுள்ளனர்.

குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த கார்ட்டூன்கள், விலங்குகள் மற்றும் பறவைகள் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன. விளையாட்டு பொருட்கள் உள்ளன.

ஒவ்வொரு படுக்கைக்கு அருகிலும் சிறுவர்களின் பெற்றோர் அமர சாய்வு நாற்காலி போடப்பட்டுள்ளது. அவசர மருத்துவ உதவிக்கு, ஒவ்வொரு படுக்கைக்கு அருகிலும் உள்ள பட்டனை அழுத்தி செவிலியர்களின் உதவியைக் கோரலாம்.

வார்டில் உள்ளவர்களுக்கு சுகாதாரமான கழிவறை, சுத்தமான குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலை நாடுகளுக்கு நிகராக மேம்படுத்திய வசதிகொண்ட அம்மா குழந்தைகள் வார்டு. எதிர்காலத் தலைமுறையின் நலம்பேணும் ஒரு மிகச்சிறந்த முன்னோடித் திட்டம் ஆகும்.



# டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்

தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் சுகாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டு, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

1-6-2011 முதல் மரு. முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி ரூ.6,000/- லிருந்து ரூ.12,000/- ஆக உயர்த்தப்பட்டு 3 தவணைகளில் நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்கில் மின்னனு பகிர்மான முறை (ECS) மூலம் வழங்கப்படுகிறது.

ஆண்டுதோறும் சுமார் 6.5 இலட்சம் தாய்மார்கள் பயனடைகிறார்கள்.

| ஆண்டு | பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 2011-12 | 515.11 |
| 2012-13 | 639.54 |
| 2013-14 | 652.16 |
| 2014-15 ஜனவரி வரை | 505.94 |

# நடமாடும் மருத்துவமனைத் திட்டம்

தொலைதூர கிராமங்கள் மற்றும் சிற்றூர்களில் தரமான மருத்துவச் சேவை வழங்கும் பொருட்டு, அனைத்து 385 வட்டாரங்களிலும், ஆய்வக வசதிகளுடன் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஊர்திகளைக் கொண்டு ரூ.40 கோடி செலவில் நடமாடும் மருத்துவமனைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.



2013-2014ஆம் ஆண்டில் 1.83 இலட்சம் முகாம்கள் நடத்தப்பட்டு 1.05 கோடி நபர்கள் இந்தத் திட்டத்தில் பயன் அடைந்துள்ளனர்.

# மேன்மையான மருத்துவக் கல்வி



**டாக்டர் கீதாலட்சுமி**
மருத்துவக் கல்வி இயக்குநர்

மக்களின் உடல்நலத்தைப் பேணிக் காப்பதற்காக தகுதிவாய்ந்த மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களை உருவாக்குவதில் மருத்துவக் கல்வித் துறை முக்கிய பங்காற்றி வருகிறது. இத்துறைக்கு நோய்க்கான சிகிச்சை அளிப்பதற்கு சிறப்பான, எளிதில் அணுகத்தக்க உயர்நிலை சுகாதார சேவையை வழங்குவதை உறுதி செய்வது மற்றும் தேவையான மனித வளத்தை உருவாக்குவது என இரண்டு பணிகள் உள்ளன.

மருத்துவப் பணிகள் இயக்ககத்திலிருந்து மருத்துவக் கல்வி பிரிக்கப்பட்டு, 1966-ஆம் ஆண்டு மருத்துவக் கல்வி இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. மருத்துவக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்து மருத்துவமனைகளை இத்துறை நிர்வகித்து வருகிறது.

அரச மருத்துவக் கல்லூரிகளும், அதனுடன் இணைந்த அரசு மருத்துவ நிலையங்களும் இவ்வியக்ககத்தின் அங்கமாகும். இவற்றை மருத்துவக் கல்லூரி முதல்வர்கள், இயக்குநர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் நிர்வகித்து வருகின்றனர்.

## கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகள்

தற்போது மருத்துவக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ், மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த கல்விக்கு 19 அரசு மருத்துவக் கல்லூரிகள், ஒரு அரசு பல் மருத்துவ கல்லூரி, இரண்டு மருந்தாளுநர் கல்லூரிகள் **(B. Pharm)**, இரண்டு இயன்முறை சிகிச்சை கல்லூரிகள், நான்கு செவலியர் கல்லூரிகள் **(B.Sc., Nursing)** செவிலிய பட்டயப் படிப்புக்கான 23 செவிலியர் பள்ளிகள் மற்றும் 45 மருத்துவமனைகள் (ஒரு பல் மருத்துவமனை மற்றும் ஒரு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை உட்பட) உள்ளன. தேனி மாவட்டம், பெரியகுளத்தில் ரூ,12,30 கோடி செலவில் மேலும் ஒரு செவிலியர் கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது.




# EXCELLENCE IN MEDICAL EDUCATION AND TERTIARY CARE

## மருத்துவப் பட்டப்படிப்பு

சுகாதாரத் துறையில் அரசு கல்வி நிலையங்களில் மருத்துவம், பல் மருத்துவம், செவிலியர், மருத்துவம் சார்ந்த படிப்புகள் மற்றும் உயர் சிறப்பு மருத்துவ படிப்புகள் போன்ற அனைத்து படிப்புகளும் உள்ளன.

### அரசு கல்வி நிலையங்களில் ஒவ்வொரு படிப்பிலும் உள்ள பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு இடங்களின் எண்ணிக்கை.

| பட்ட/பட்டயப் படிப்பின் பெயர் | இடங்கள் |
|---|---|
| மருத்துவப் பட்டப்படிப்பு (M.B.B.S) | 2,555 |
| பல் மருத்துவப் பட்டப்படிப்பு (B.D.S) | 100 |
| செவிலியர் பட்டப்படிப்பு (B.Sc., Nursing) | 250 |
| போஸ்ட் பேசிக் செவிலியர் படிப்பு (Post Basic B.Sc. Nursing) | 90 |
| கதிரியல் நோயறிதல் பட்டப்படிப்பு (B.Sc., Radio Diagnosis) | 60 |
| கதிரியல் சிகிச்சை பட்டப்படிப்பு (B.Sc Radiotherapy) | 20 |
| கார்டியோ பல்மனரி பர்புயுஸன் தொழில்நுட்ப பட்டப்படிப்பு (B.Sc ., Cardio Pulmonary Perfusion Technology) | 10 |
| இயன்முறை சிகிச்சை பட்டப்படிப்பு (B.P.T.) | 50 |
| மருந்தாக்கியல் பட்டப்படிப்பு (B.Pharm) | 120 |
| செவித்திறன் மற்றும் பேச்சு மொழி நோய் குறியியல் பட்டப்படிப்பு (B.Sc., BASLP) | 25 |
| செவிலியர் பட்டயப்படிப்பு (Diploma in Nursing) | 2,000 |
| மருந்தாக்கியல் பட்டயப்படிப்பு (Diploma in Pharmacy) | 240 |
| மருத்துவம் சார்ந்த படிப்புகள் (23 பிரிவுகள்) | 5,690 |



## மருத்துவப் பட்ட மேற்படிப்பு

பட்ட மேற்படிப்பு படிக்க விரும்பும் மாணவர்களுக்கு போதுமான அளவில் இடங்கள் இருப்பதை உறுதி செய்ய, அரசு முயற்சி செய்து வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளிலுள்ள பட்ட மேற்படிப்பு விவரங்களை கீழே காணலாம்.

### பட்ட மேற்படிப்பிலுள்ள சிறப்பு பிரிவுகள் மற்றும் அவற்றிற்கான இடங்களின் விவரங்கள்.

| படிப்புகள் | சிறப்பு பிரிவுகளின் எண்ணிக்கை | மொத்த சேர்க்கை இடங்கள் |
|---|---|---|
| பட்ட மேற்படிப்பு (மருத்துவம்) | 23 | 757 |
| பட்டய மேற்படிப்பு (மருத்துவம்) | 15 | 403 |
| பல்மருத்துவ பட்ட மேற்படிப்பு **(MDS)** | 8 | 40 |
| உயர் சிறப்பு மேற்படிப்புகள் **(Higher Speciality)** | 16 | 191 |
| மருந்தாக்கியல் பட்ட மேற்படிப்பு **(M.Pharm.,)** | 4 | 64 |
| செவிலியர் பட்ட மேற்படிப்பு **(M.Sc., Nursing)** | 5 | 65 |
| மருத்துவ இயற்பியல் பட்ட மேற்படிப்பு **(M.Sc., Medical Physics)** | 1 | 10 |
| எம்ஃபில் மருத்துவ சமூகப்பணி **(Clinical Social Work)** | 1 | 15 |
| எம்.எஸ்.ஸி அணுத்திறமம் நோய் நுண்ணியியல் **(Molecular Virology)** | 1 | 21 |



மாநிலத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பல தனியார் சுயநிதி நிலையங்கள் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த கல்வியை வழங்கி வருகின்றன.

## அரசால் மாணவர் ஒதுக்கீடு செய்ய, தனியார் சுயநிதி மருத்துவக் கல்லூரிகள் அரசுக்கு ஒப்புவிப்பு செய்த இடங்களின் விவரம்

| கல்லூரிகளின் வகை | கல்லூரிகள் எண்ணிக்கை | இடங்கள் |
|---|---|---|
| மருத்துவக் கல்லூரிகள் | 13 | 993 |
| பல் மருத்துவக் கல்லூரிகள் | 18 | 1,020 |
| மருந்தாக்கியல் கல்லூரிகள் | 32 | 1,147 |
| இயன்முறை சிகிச்சை மருத்துவக் கல்லூரிகள் | 22 | 649 |
| செவிலியர் பட்டப்படிப்பு கல்லூரிகள் | 147 | 5,134 |
| தொழில் வழி சிகிச்சை பட்டப்படிப்பு கல்லூரிகள் | 1 | 33 |
| பட்டய படிப்பிலிருந்து மருந்தாக்கியல் பட்ட படிப்பிற்கான கல்லூரிகள் (பிற்சேர்க்கை 10 விழுக்காடு) | 32 | 183 |
| போஸ்ட் பேசிக் செவிலியர் கல்லூரிகள் | 61 | 1,292 |

# புதிய அதிநவீன மருத்துவக்கல்லூரி கட்டடங்கள்



ஒளிரும் சென்னை மருத்துவக்கல்லூரி





ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் புது மருத்துவமனைக் கட்டடம்

New Hospital Buildings at Government Stanley Medical College Hospital and Thanjavur Medical College Hospital

தஞ்சாவூர் அரசு பொது மருத்துவமனையின் கீழ் இயங்கும் 300 படுக்கை வசதிகளுடன் கூடிய புது மருத்துவமனை கட்டடம்

# நவீன அரங்கங்கள் மற்றும் வகுப்பறைகள்





அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட கலை அரங்கம். இரு அடுக்குகளாக 600 மாணவர்கள் அமரும் வசதி கொண்டது


Modern auditorium inaugurated by our Chief Minister at Government Stanley Medical College. This two tier auditorium can accommodate 600 students

கணினிமயமாக்கப்பட்ட வகுப்பறைகள், மாணவர்கள் எளிதாக பயிலும் வகையில் தொடு திரை வசதியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது

Class room with Smart Board and E learning facilities for better learning



# கதிரியக்க ஆய்வுப் பிரிவின் வளர்ச்சி



முழு உடலையும் ஆராயும் திறன் கொண்ட 1.5 டெஸ்லா எம்.ஆர்.ஐ ஸ்கேன் மின்காந்த அலை பரிசோதனை கருவி

1.5 Tesla MRI scan for whole body high resolution medical imaging







CTஸ்கேன் / MRI வசதிகள் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன

CT & MRI scan facilities have been established in medical college hospitals

டிஜிட்டல் ஊடு கதிர் வசதிகள் – படமின்றி ஒளித்திரை மூலம் காணலாம்.

Digital x-ray facilities help filmless viewing of x-rays using monitors

# புற்று நோய் சிகிச்சை மையம்



புற்று நோய் சிறப்பு சிகிச்சை மையம் அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் செயல்பட்டுவருகிறது. இங்கு புற்றுநோய் அறுவை சிகிச்சை மற்றும் அதிநவீன கதிர்வீச்சு சிகிச்சைக்கான உள்கட்டமைப்பு வசதிகள் உள்ளன. இங்குள்ள கதிர்வீச்சு எந்திரம் வெளி தோல் பாதிக்காவண்ணம் புற்று நோய் கட்டியை சிதைக்கும் திறம் கொண்டது

Cancer Centre at Government Royapettah Hospital has state of the art facilities to treat cancer patients. This Centre also has advanced linear accelerator to provide skin sparing irradiation to cancer patients



# தீவிர இதய – மார்பு அறுவை சிகிச்சை மையம்



இதயம் மற்றும் நுரையீரல் அறுவைசிகிச்சைகள் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் செய்யப்படுவதால் அறுவை சிகிச்சை முடிந்தவுடன் நோயாளிகளை கண்காணிக்கும் வண்ணம் அனைத்து வசதிகளுடன் கூடிய வார்டுகள் ஏற்படுத்தப்பட்டுள்ள. இந்த வார்டுகளில் நோயாளிகளின் கால்களில் குருதி ஓட்டம் தடைபடா வண்ணம் காக்கும் சிறப்பு கட்டில்கள் உண்டு

Cardiothoracic surgeries are regularly performed in Government medical college hospitals. To facilitate post-operative care post-operative wards with special equipment have been provided. Cots provided here are specially equipped to prevent deep vein thrombosis occurring in the legs



# இளம் சிசு தீவிர சிகிச்சை பிரிவு









Neonatal intensive care facilities available in Government Medical College Hospitals have saved lives of many infants

அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் செயல்பட்டு வரும் இளம் சிசு தீவிர சிகிச்சை பிரிவு திறம்பட செயல்பட்டு பல பச்சிளம் குழந்தைகளின் உயிர்களை காத்துள்ளது



# நவீன வசதிகளுடன் கூடிய குருதி வங்கி





அதிநவீன வசதிகளுடன் அரசு பொது மருத்துவமனையில் செயல்பட்டு வரும் குருதி வங்கி. இங்கு தானமாக பெறப்படும் குருதி நல்ல முறையில் சேமிக்கப்படுகிறது. குருதிலிருந்து அதன் அணுக்கள் (component separation) பிரிக்கப்பட்டு சேமிக்கப்படுவதால் தானமாக பெறப்பட்ட குருதி வீணாகாமல் நீண்ட நாட்கள் சேமிக்கப்படும்

This state of the art Blood Bank functioning at Government General Hospital Chennai has excellent facilities to store blood. Components are separated from blood immediately and stored separately here thereby increasing the shelf life of blood products





# தாய் - சேய்
## வீடு திரும்ப இலவச ஆம்புலன்ஸ்



அயனாவரம், சைதாப்பேட்டையில் உள்ள மாநகராட்சி 24 மணிநேர மகப்பேறு மருத்துவமனைகளில் பிரசவித்த தாய் மற்றும் குழந்தை வீடு திரும்ப இலவச வாகன வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டம், அரசு மருத்துவமனைகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது, இதன் ஒரு பகுதியாக சென்னை மாநகராட்சியிலும், இந்த திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. சைதாப்பேட்டை, அயனாவரம் ஆகிய இரண்டு 24 மணிநேர மகப்பேறு மருத்துவமனைகளிலும், இதற்காக இரண்டு பிரத்யேக ஆம்புலன்ஸ்கள் வழங்கப்பட்டு உள்ளன.

இந்த வாகனம் மூலம் குழந்தை, பிரசவித்த தாய் ஆகியோர் பாதுகாப்பாக வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். மாநகராட்சியில் மற்ற 11 மகப்பேறு மருத்துவமனைகளிலும் இந்த சேவை விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.



# பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை

**சென்னையில் அமைந்துள்ள, தமிழ்நாடு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை உலகத் தரம் வாய்ந்த வசதிகள் கொண்டது. ஏழை, எளிய மக்களுக்கு உயர் மருத்துவ வசதிகள் மற்றும் சிகிச்சைகள் தங்கு தடையின்றி கிடைக்க இது புதியதோர் சகாப்தமாகத் திகழ்கிறது.**

14 அறுவை சிகிச்சை அரங்குகள், அதி நவீன அம்சங்களுடன் கூடிய உபகரணங்கள் மற்றும் மருத்துவக் கருவிகள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன.

- மத்திய ஆய்வகம் தரம் மிகுந்த அதி நவீன உபகரணங்களைக் கொண்டு நுட்பமான பரிசோதனைகளை உடனுக்குடன் விரைவான முறையில் செயல்படுத்தும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

- நவீன இரத்த சேமிப்பு மையம், தேவையான இரத்தம் மற்றும் இரத்தம் சார்ந்த பொருட்களை நோயாளிகளுக்கு எளிதிலும், மிக விரைவிலும் கிடைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

- நவீன மத்திய நுண்கிருமி போக்கித் துறையில் அறுவை அரங்கு மற்றும் பரிசோதனைக் கூடத்திற்கு தேவையான உபகரணங்களை சுத்திகரிப்பு செய்யும் வசதிகள் இங்கு உள்ளது.

- 20 படுக்கைகள் கொண்ட டாயலிஸிஸ் சுத்திகரிப்பு நிலையம் இங்கு உள்ளது. தேவையான தண்ணீரை ஆஸ்மோஸிஸ் முறையில் மறுசுழற்சி செய்வதற்கான வசதிகளும் உள்ளன.



- அதி நவீன தீவிர சிகிச்சைப் பிரிவானது நவீன உபகரணங்களுடன் ரிமோட் கண்ட்ரோல் வசதிகளுடன் கூடிய படுக்கைகள், திரைகள் மற்றும் பொது பிராண வாயு, செயற்கை சுவாசத்திற்கான உபகரணம் கொண்டு மிகச் சிறப்பான முறையில் செயல்படுகிறது.

- சீ- ஆர்ம் என்ற அதி நவீன நுட்பம் கொண்ட எக்ஸ்ரே உபகரணமும், அதனோடு கூடிய கார்பன் பைபர் மேசையும் நவீன துல்லியமான மானிட்டர்களும், இன்டர்மிட்டன்ட் நியுமேடிக் கம்ப்பிரஷன் டிவைஸ் என்ற இரத்த நாளக் கருவிகளும் அமைக்கப்பட்டுள்ளது.

- பரிசோதனை மூலம் இதயத்தில் பொதுவாக ஏற்படும் இதயநோய்கள், பெரிய கட்டிகள் மேலும் தசை திசுக்களில் ஏற்படும் நோய்களையும் எளிய முறையில் மிக துல்லியமாகக் காட்டும் கருவியான 128 ஸ்லைஸ் சி.டி.ஸ்கேன் என்ற அதிநவீன கருவி இங்கு பொருத்தப்பட்டுள்ளது.

- 32 சேனல் கொண்ட மூளையில் பரிமாணங்களை கண்டறியும் கருவி, 128 சேனல் கொண்ட இ.சி.ஜி/என்.சி.எஸ், கருவி, ஸ்டிமுலேட்டர், மூளைக்கான இரத்த குழாய் கருவி, போன்றவை நரம்பியல் துறையில் அமைக்கப்பட்டுள்ளது.


- **1.5 Tesla MRI** மின் காந்த அலை பரிசோதனைக் கருவி என்ற முழு உடலையும் ஆராயும் அதீத திறன்கொண்ட கருவி அமைக்கப்பட்டுள்ளது.

- நோயாளிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் வசதிக்காக ஒவ்வொரு தளத்திலும் நவீன முறையிலான சிறப்பு பேட்டரி கார் வசதி செய்யப்பட்டுள்ளது.

## அனைத்தும் இலவசமாக

மூளை இரத்தநாள ஆஞ்சியோ மற்றும் காயிலிங் சிகிச்சைகள் அறுவை சிகிச்சையின்றி நுண்ணிய துளை மூலம், ஃபைப்லேன் மூளை இரத்த நாள ஆஞ்சியோ கருவி **(Coiling and Embolization)** மூலமாக இம்மருத்துவமனையில் நோய்கள் சரிசெய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் இங்கு மட்டுமே இவ்வசதி உள்ளது. இக்கருவியின் விலை ரூ. 5.5 கோடியாகும். தமிழ்நாட்டில் 3 தனியார் மருத்துவமனைகளில் மட்டுமே இந்தக் கருவி வசதி உள்ளது. அங்கு ரூ.7 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் இம் மருத்துவமனைகளில் அனைத்து சேவைகளும் இலவசமாகவே செய்யப்படுகிறது. இதுரை 188 நோயாளிகளுக்கு இந்த சிகிச்சை வழங்கப்பட்டு காப்பாற்றப்பட்டுள்ளனர்.

புற்றுநோய் மருத்துவ சிகிச்சை, கதிரியக்க சிகிச்சைகள் அனைத்தும் நவீன கருவிகள் மூலம் இங்க இலவசமாக செய்யப்படுகிறது. இதுவரை 2,000க்கும் மேற்பட்டவர்கள் குணமாக்கப்பட்டுள்ளனர். இதுவரை 269 கை மற்றும் புனரமைப்பு நுண் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளது. நரம்பியல் துறையில் 160 அறுவை சிகிச்சையும், இருதயப்பிரிவில் 77 அறுவை சிகிச்சையும், பிளாஸ்டிக் சர்ஜரி 362ம், 345 இரத்த நாள அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளது.



## அணுவியல் மருத்துவ வசதி

**(Nuclear Medicine)**

இந்திய அளவில் அணுவியல் மருத்துவம் ஒரு சில மருத்துமனைகளில் மட்டுமே உள்ளது. இம்மருத்துவமனையில் அணுவியல் மருத்துவம் தொடங்கிட இந்திய அணுசக்திக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது. விரைவில் இதற்கானப் பணிகள் துவக்கப்படும். இவ்வசதி இங்கு அமையும் பொழுது ஏழை, எளிய மக்கள் அனைவருக்கும் இலவசமாகத் தரம் வாய்ந்த சிகிச்சை வழங்கிட முடியும்.

தமிழ்நாடு அரச பன்னோக்கு உயர்சிகிச்சை மருத்துவமனையில் பல்வேறுப் பிரிவுகளில் அரிய வகையில் அறுவை சிகிச்சை செய்து பயன்பெற்ற பயனாளிகள் தங்கள் கருத்துக்களையும் நன்றியையும் தெரிவித்துள்ளனர்.

# பயனடைந்தவர்கள் பாராட்டுகிறார்கள்!

## இரத்த சுத்திகரிப்பு (Dialysis) செய்து கொண்ட பயனாளியான தேனி மாவட்டம், எல்லப்பட்டியைச் சார்ந்த திரு.செந்தில்குமார்



நான் எனது கிராமமான எல்லப்பட்டியில் நெசவுத்தொழில் செய்து வரும் ஏழைத் தொழிலாளி. கடந்த 2 ஆண்டுகளாக சிறுநீரகக் கோளாறு ஏற்பட்டு சிகிச்சை பெற்று வந்தேன். டையாலிசிஸ் செய்யவேண்டும் என்று தனியார் மருத்துவமனையில் கூறி வாரம் ஒரு முறை டையாலிசிஸ் செய்தார்கள். இதற்கு ஒரு முறை செய்திட ரூ.2,000/- கட்டணம் கொடுத்தேன்.

நான் முடிந்தவரை கடன்வாங்கி இந்த சிகிச்சையை செய்தேன். தொடர்ந்து செய்ய முடியாமல் அவதிப்பட்டேன். அப்பொழுது தான் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் ஓமந்தூரார் சிறப்பு மருத்துவமனையில் இலவசமாக டையாலிசிஸ் செய்யலாம் என்றார்கள். உடனே இங்கு வாரத்திற்கு ஒரு முறை வந்து இலவசமாக செய்துகொண்டேன். தனியார் மருத்துவமனைக்கு இணையாக டையாலிசிஸ் செய்கிறார்கள். இந்த மருத்துவமனையையும், மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தையும் வழங்கி என்னைப் போன்ற ஏழைகளைக் காத்திடும் தெய்வம் புரட்சித்தலைவி அம்மாவிற்கு நான் என்றும் நன்றி உள்ளவனாக இருப்பேன்.

## வால்வு மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட பயனாளி விருதுநகர் மாவட்டம், காமாட்சி சூரால்குடியைச் சார்ந்த திருமதி மாரீஸ்வரி ரெங்கவேல்



விவசாயக் கூலித் தொழிலாளியான எனக்கு இருதயக் கோளாறு காரணமாக திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்தேன். திடீரென ஒரு நாள் மயக்கம் போட்டு விழுந்துவிட்டேன். உறவினர்கள் என்னை அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றார்கள். அங்கு இதயத்தில் உள்ள வால்வு மாற்றவேண்டும் என்றும் இதற்கு ரூ.2 இலட்சம் வரை செலவாகும் என்றார்கள். ப்ஸ் ஏறிச் செல்லவே காசு இல்லை என்றேன்.

உடனே முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இலவசமாக இதை செய்யலாம் என்று அங்கிருந்த மருத்துவர் ஒருவர் கூறினார். இப்பொழுது குணமடைந்து விட்டேன். என்னை காப்பாற்றிய அம்மா அவர்களுக்கு நன்றியைச் சொல்கிறேன்.

# Glimpses














# The Tamil Nadu Dr. M.G.R. Medical University





**Prof. D. Shantharam** M.D., D.Diab.,
Vice-Chancellor

The need to have a separate Medical University in Tamilnadu exclusively to deal with medical education and research at Under graduate, Post graduate and Doctoral level was keenly felt for over a period of years and was under consideration of the State Government since 1980.

## High Level Committee

The State Government appointed a High Level Committee to go into all aspects of establishing a separate Medical University and make suitable recommendations to the State Government.The members of the High Level Committee consisting of Dr. S. Arumugam, Dr. M. Natarajan and Dr. S. Kameswaran submitted the proposals to the then Chief Minister of Tamil Nadu Hon Dr. M.G. Ramachandran on 5.7.1983 to start a separate Medical University in Tamil Nadu

## Integration

Apart from modern medicine, the Committee was also requested to examine and suggest improvements to be made in other traditional systems of Indian Medicine viz. Siddha, Ayurveda and Unani. The intension was that the Medical University to be established in Tamil Nadu should bring about co-ordination between various educational and training institutions of modern medicine as well as other Indian Systems of Medicine, Dentistry, Nursing, Pharmacy, etc. and promote research.

## Established

Based on the report of the Committee, the Medical University was established by the Government of Tamil Nadu. This affiliating University governed by the Tamil Nadu Medical University Act, 1987 started functioning from July 1988. The University is now functioning in its own building at Nawab Garden, 69, Anna Salai, Guindy, Chennai - 600 032 with effect from 12.6.1994.

## Medical Education

This is the only Medical University in Tamil Nadu capable of granting affiliation to new institutions under Government or Self-financing in Medical, Dental, Indian Medicine/Homoeopathy & Allied Health Sciences(Pharmacy, Nursing, Physiotherapy, Occupational therapy etc.) and awarding degrees under a single umbrella to maintain uniform and high standards of education.

## Research

The University also promotes research and disseminates knowledge gained there from. It serves for the advancement and dissemination of knowledge in the field of medical sciences.

## The Emblem

The University emblem symbolises various systems of medicine viz., Medical, Dental, Indian Medicine/Homoeopathy & Allied Health Sciences. It also depicts the global character of preventive, promotive and curative medicine. The motto "Health for all" reflects the objective of the Medical University.

## Mission Statement

- To achieve and maintain uniformly high standards of needs responsive medical education in the State of Tamil Nadu.
- To create personnel for health manpower who will be endowed with a sense of dedication and a spirit of enquiry and will contribute substantially to the Alma At a goals of health for all by 2020 A.D.

# இந்தியமுறை மருத்துவக் கல்வி

நாட்டிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் ஐந்து இந்தியமுறை மருத்துவத்திற்கு அரசு மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன. மாநிலத்தில் இந்தியமுறை மருத்துவத்தின் கீழ் தற்போது இயங்கி வரும் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை விவரங்களை அட்டவணையில் காணலாம்.

## அரசு மற்றும் தனியார் இந்திய மருத்துவமுறை கல்லூரிகள் எண்ணிக்கை

| வ.எண். | மருத்துவ முறை | அரசு கல்லூரிகளின் எண்ணிக்கை | தனியார் கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சித்தா | 2 | 5 |
| 2. | ஆயுர்வேதா | 1 | 3 |
| 3. | யுனானி | 1 | - |
| 4. | யோகா மற்றும் இயற்கை மருத்துவம் | 1 | 4 |
| 5. | ஓமியோபதி | 1 | 8 |
| | மொத்தம் | 6 | 20 |



மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் யோகா மற்றும் இயற்கை வைத்திய பிரிவுகளும் செயல்பட்டுவருகின்றன

## அரசு கல்லூரிகள்

- அரசு சித்த மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்
- அரசு சித்த மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை
- அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை
- அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி திருமங்கலம், மதுரை மாவட்டம்
- அரசு யுனானி மருத்துவக் கல்லூரி, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை
- அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, கோட்டாறு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.




# இன்ஃப்ளூன்சா (பன்றி காய்ச்சல்)

## இன்ஃப்ளுன்சா காய்ச்சல் என்றால் என்ன?

A(H1N1) எனப்படும் இன்ஃப்ளுன்சா வைரஸ் கிருமிகளால் ஏற்படும் காய்ச்சல் இன்ஃப்ளுன்சா காய்ச்சல் எனப்படுகிறது

## இன்ஃப்ளுன்சா காய்ச்சலின் அறிகுறிகள் யாவை?

சளி, காய்ச்சல், இருமல், தும்மல், தலைவலி, மற்றும் தொண்டை வலி போன்றவை .இன்ஃப்ளுன்சா தொற்றின் அறிகுறிகள் ஆகும், ஒரு சிலருக்கு மேற்கண்ட அறிகுறிகளுடன் வாந்தி அல்லது வயிற்றுப் போக்கும் ஏற்படலாம்.


சளி


காய்ச்சல்


இருமல்


தும்மல்


தலைவலி


தொண்டை வலி

## பன்றிக்காய்ச்சல் இன்ஃப்ளுன்சா A(H1N1) தொற்று எப்படி ஏற்படுகிறது?



A(H1N1) கிருமி தொற்று ஏற்பட்டவர் இருமும் போது அல்லது தும்மும் போது வெளிப்படும் நீர் திவலைகள் மூலம் நோய் கிருமிகள் காற்றில் பரவுகிறது. இந்த நீர் திவலைகள் படிந்த பொருட்களை தொடும் பொழுது கைகளில் இந்த கிருமி ஒட்டிக் கொள்கிறது. கைகளை கழுவாமல் கண்கள், மூக்கு அல்லது வாயைத் தொடும் போது கிருமித் தொற்று ஏற்படுகிறது.

## பன்றிகளிடம் இருந்து மனிதர்களுக்கு இந்நோய் தொற்று ஏற்படுகிறதா?



இல்லை. இந்த இன்ஃப்ளுன்சா A(H1N1) காய்ச்சல் பன்றிகளிடமிருந்து மற்றவர்களுக்கு தொற்றுவது இல்லை. ஆரம்ப காலத்தில் அதாவது 1920-30களில் இந்த நோய் பன்றிகளிடையே காணப்பட்டதால் பன்றிக்காய்ச்சல் என அழைக்கப்பட்டது. தற்பொழுது இந்நோய் பாதிக்கப்பட்ட மனிதரிடமிருந்து மட்டுமே மற்றவர்களுக்கு பரவுகிறது.

## சுற்றுச்சூழலில் வைரஸ் எவ்வளவு காலம் வாழும்?



இன்ஃப்ளுன்சா வைரஸ் கிருமிகள், தரைபரப்பு, கதவு மற்றும் மேசைகள் போன்ற பரப்புகளில் பல மணி நேரம் உயிருடன் இருக்க வாய்ப்புள்ளது. குளிர்ந்த இடங்களில் இரண்டு நாட்கள் வரை கூட கிருமிகள் இருக்கலாம். கதவு, கைப்பிடிகள், மேசை பரப்பு, நாற்காலிகள், மின் ஸ்விட்ச்கள், தொலைபேசி போன்றவற்றை தினமும் ஒரு முறையாவது கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்வதன் மூலமும் கைகளை கைகழுவுதல் மூலமும் நோய் தொற்றை பெருமளவு தடுக்கலாம்.

## இன்ஃப்ளுன்சா A(H1N1) தொற்று ஏற்படாமல் எவ்வாறு தடுப்பது?



- உங்கள் கைகளை அடிக்கடி சோப்பு போட்டு கழுவ வேண்டும். வீட்டிலிருந்து பள்ளிக்கோ அலுவலகத்திற்கோ பணியிடத்திற்கோ சென்றவுடன் கை கழு வேண்டும். அதே போல் வீடு திரும்பியவுடன் சோப்பு போட்டு கை கால்களை நன்கு கழுவ வேண்டும்.
- கைகளை கழுவாமல் மூக்கு, வாய் மற்றும் கண்களை தொடுவதை தவிர்க்கவும்.
- காய்ச்சல் அறிகுறி உள்ளவரிடமிருந்து சுமார் 1 மீட்டர் இடைவெளி விட்டு விலகி இருக்க வேண்டும்.

## இன்ஃப்ளுன்சா A(H1N1) காய்ச்சலுக்கு மருந்து இருக்கிறதா?

- இன்ஃப்ளுன்சா நோய் குணமாகவும் மேலும் நோய் எதிர்ப்பு சிகிச்சைக்காகவும் Oseltamivir என்கிற சக்தி வாய்ந்த மருந்து உள்ளது.
- எந்தவிதமான காய்ச்சல் ஏற்பட்டாலும் மருத்துவரை ஆலோசிக்க வேண்டும் A(H1N1) காய்ச்சலாக இருப்பின் அறிகுறிகள் ஏற்பட்ட ஐந்து நாட்களுக்குள் இந்த மருந்து உட்கொண்டால் எளிதில் குணப்படுத்தலாம். இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களை உடனிருந்து கவனிப்பவர்களுக்கு மருத்துவ ஆலோசனை பேரில் தற்காப்பாக இம்மருந்து வழங்கப்படுகிறது.

## இன்ஃப்ளுன்சா A(H1N1) காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் யாவை?

- காய்ச்சலின் அறிகுறிகள் தென்பட்டவுடன் மருத்துவ ஆலோசனை பெற்று முறையான சிகிச்சை பெற வேண்டும்.
- மருத்துவ ஆலோசனை இல்லாமல் தாமாகவே மருந்துகளை உட்கொள்ளுதல் கூடாது.
- நோயின் அறிகுறிகள் தென்பட்டவுடன் வீட்டிலேயே ஓய்வில் இருக்க வேண்டும்.
- பள்ளி, அலுவலகம் மற்றும் பொது இடங்களுக்கு செல்வதை தவிர்க்கவும்.
- இருமும் போதும், தும்மும் போதும் வாய் மற்றும் மூக்கை கைக்குட்டை அல்லது துணியால் மூடிக் கொள்ளவும்.
- பயன்படுத்திய கைக்குட்டை மற்றும் இதர துணிகளை நன்கு துவைத்து வெயிலில் காய வைத்து பயன்படுத்தவும்

## பொது இடங்களை வைரஸ் கிருமிகள் இல்லாமல் எவ்வாறு தூய்மையாக வைத்துக்கொள்வது?


பேருந்துகள், ரயில்கள், மாடிப்படி/எஸ்கலேட்டர் கைப்பிடிகள் கதவு கைப்பிடிகள், டிக்கெட் கவுண்டர்கள், லிப்ட் போன்றவற்றில் உள்ள ஸ்விட்ச்சுகள், திரையரங்குகள்/பொது இடங்களில் உள்ள இருக்கைகள் போன்ற அடிக்கடி கைகள் படக்கூடிய இடங்களை அவ்வப்போது கிருமி நாசினிகள் கொண்டு சுத்தமாக துடைக்க வேண்டும்.

## கைகளை எவ்வாறு கழுவுவது?

நன்றாக கை கழுவ குறைந்தது 30 வினாடிகள் தேவைப்படும்.





கைகளைத் தண்ணீரில் ஈரப்படுத்தவும்





தாராளமாகக் கை முழுவதும் சோப் போடவும்





கையோடு கை சேர்த்துத் தேய்த்துக் கழுவவும்




வலது விரல்களை இடது விரலிடுக்களில் நுழைத்து மாறி மாறித் தேய்க்கவும்




விரல்களை கோர்த்து இருகைகளை தேய்க்கவும்





கைகளை விரல் பின் பாகங்களை இடுக்கியிட்டுத் தேய்க்கவும்




கட்டைவிரலை சுழற்றி இரு கைகளை தேய்க்கவும்




பின்பக்கம் முன் பக்கமாக விரல்களை சுழற்றி மாறி மாறி தேய்க்கவும்




தண்ணீரில் நன்கு கைகளை / அலம்பவும்

## கூடுதல் தகவல்களுக்கு ☎ 104

**உங்கள் பகுதியில் காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக பொது சுகாதாரத் துறையின் 24x7 மணி நேர கட்டுப்பாட்டு மையத்தை தொடர்பு கொள்ளலாம். குறுஞ்செய்தியாகவும் தெரியப்படுத்தலாம்.**

**தொலைபேசி : 044-24350496 / 044-24334811**
**கைபேசி : 9444340496 / 9361482899**

வெளியீடு :
**பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை.**
சென்னை – 6.

# தாய்-சேய் நல மையங்கள்

தமிழ்நாடு அரசு தொலைநோக்குச் சிந்தனையோடு சிறப்புமிக்க திட்டங்களைச் செயல்படுத்தி வருவதால் தமிழ்நாட்டு மக்களின் சுகாதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. மாநிலத்தில் ஒருங்கிணைந்த பொது சுகாதாரத் திட்டங்கள் மூலம் மக்களின் தேவையை நிறைவேற்றுவதோடு, தாய்-சேய் நலன் காக்கப்படுகிறது. தமிழகத்தின் திட்டங்களை பல்வேறு நாடுகளின் தலைவர்கள், உலக வங்கி, உலக சுகாதார நிறுவனப் பிரதிநிதிகள் பாராட்டியுள்ளனர்.



தமிழகத்தில் ஆண்டுதோறும் 12 இலட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்கும் 11 இலட்சம் குழந்தைகளுக்கும் தடுப்பூசிகள் போடப்படுகிறது.

குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் குறைபாடுகளை கருவிலேயே கண்டறிய மருத்துவ அலுவலர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலுள்ள 256 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும், மருத்துவ அலுவலர்களுக்கு, 'அல்ட்ரா ஸ்கேன்' பரிசோதனை மூலம் கருவிலுள்ள குழந்தையின் குறைபாடுகளை கண்டறிய நேரடியாகவும், இணையதளம் வழியாகவும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

சீமாங்க் **(CEMONC)** என்றழைக்கப்படும் ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு சேவை மையத்தின் சிறப்பான செயல்பாடுகள் மூலம் பிரசவத்தின் பொழுது இறப்பு விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

சீமாங்க் **(CEMONC)** என்றழைக்கப்படும் ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு சேவை மையத்தின் சிறப்பான செயல்பாடுகள் மூலம் பிரசவத்தின் பொழுது இறப்பு விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் தாய்-சேய் நல மற்றும் மேம்பாடு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. 1980 இல் பிரசவத்தின்பொழுது தாய்மார்களின் இறப்பு விழுக்காடு 1 இலட்சத்திற்கு 178 என்பது இப்பொழுது 68 ஆக குறைந்துள்ளது.

குழந்தை இறப்பு சதவிகிதம் 1,000க்கு 93 என்ற நிலை தற்பொழுது 1,000க்கு 21 என்ற அளவில் குறைந்துள்ளது. சீமாங்க் மையங்களின் சிறப்பான சேவையே இந்த வெற்றிக்குக் காரணம்.





# பத்து கேள்விகள் பளிச் பதில்கள்

தாய் சேய் நல மருத்துவர் **கோ. சாந்தி**

## கர்ப்பமாய் இருக்கும்போது, சூடான பானங்களை தவிர்க்கச் சொல்வது ஏன்?

உணவுப் பொருட்களை சூடாக சாப்பிடும் போது, உணவுக்குழாய் புண்பட்டு, 'அல்சர்' வரவாய்ப்பிருக்கிறது. கர்ப்ப காலங்களில் இப்பிரச்சனை ஏற்பட்டால், அது குழந்தையின் வளர்ச்சிக்கு ஆரோக்கியம் தராது என்பதால், சூடான பானங்களை தவிர்க்கச் சொல்கின்றனர்.

## கர்ப்ப காலத்தில் அடிக்கடி சளி, இருமல் ஏற்படுவது எதனால்?

கர்ப்ப காலத்தில், உடலில் ஏற்படும் நீர் வறட்சியை சமாளிக்க, குளிர்ச்சியான உணவுகளை மனம் தேடும். அந்த சமயத்தில், கட்டுப்பாடு இல்லாமல், அவ்வுணவுகளை சாப்பிடுவதால் சளி, இருமல் ஏற்படும் வாய்ப்புண்டு.

## கார்போஹைட்ரேட் உணவுகள் / புரத உணவுகள் - கர்ப்ப காலத்திற்கு எது சிறந்தது?

குழந்தையின் வளர்ச்சிக்கு கார்போஹைட்ரேட்டுகள் மிக அவசியம். மேலும், நம் உடலிலுள்ள ரத்தச் சிவப்பணுக்கள் மற்றும் மூளைச் செல்கள் இயங்குதற்கு கார்போஹைட்ரேட்டுகளுடன், புரதசத்தும் தேவை. எனவே, இவ்விரண்டினையும் சம அளவில் எடுத்துக் கொள்வது நல்லது.

## ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு அல்லது உப்பின் அளவு கர்ப்பிணிகளுக்கு திடீரென கூடுவது ஏன்?

சிலருக்கு உடல்பருமன் காரணமாக இப்படி நிகழலாம். சிலருக்கு மரபணுக்களில் உள்ள குறைபாடுகளால் இப்பிரச்சினை ஏற்படும். இதனால் கருவில் இருக்கும் குழந்தைக்கு பாதிப்பு உண்டாகும் வாய்ப்புண்டு. இச்சூழலில்தான், குறைப் பிரசவம் அல்லது கருப்பையில் குழந்தை இறந்து போதல் உள்ளிட்ட சிக்கல்கள் ஏற்படும்.

## கர்ப்ப காலத்தில் கால்கள் வீக்கமடைவது ஏன்?

இச்சமயத்தில், கால்களிலிருந்து இதயத்திற்கு திரும்பும் ஆக்ஸிஜன் இல்லா ரத்தம், குழந்தையின் வளர்ச்சி காரணமாக தடைபடும். இதனால் ரத்தநாளங்களில் தேக்கம் ஏற்பட்டு பாதங்களில் நீர் தேங்கும். கால்களில் வீக்கம் ஏற்படும் இதனால், தாய்க்கு எந்த பிரச்சினையும் ஏற்படாது.

## கர்ப்பிணிகளுக்கு அடிக்கடி உண்டாகும் வயிற்று வலி?

கர்ப்ப காலத்தில் குழந்தையின் வளர்ச்சிக்கு தக்கவாறு கருப்பையானது விரிவடையும். வயிற்றிலுள்ள குழந்தை அசையும் போதெல்லாம், அடிவயிற்றில் பிடிப்புடன் கூடிய வலி ஏற்படும். இது சகஜமானதே.பயப்படத் தேவையில்லை.

## சரி, முதுகு வலி அடிக்கடி வருகிறதே?

கர்ப்ப காலத்தின் ஒவ்வொரு நிலையின் போதும் குழந்தையின் உடல் உறுப்புகள் வளர்ச்சியடைவதால் வயிறு பெரிதாக பெரிதாக அதை தாங்கும் முதுகில், வலி அதிகரித்தபடி இருக்கும். இத்தகைய வலியை, பிரசவம் முடியும் வரை அனுபவித்து தான் ஆக வேண்டும்.

## அது என்ன 'மானிங் சிக்னெஸ்'?

பொதுவாக, வயிற்றிலிருக்கும் குழந்தை, அதற்கு தேவையான சத்துக்களை தாயிடமிருந்து உறிஞ்சிக் கொள்ளும். இதனால், தாயின் உடல்நிலையில் சோர்வு ஏற்பட்டு, சில நேரங்களில் மயக்கம் வருவது போல் தோன்றும்: எதைச் சாப்பிட்டாலும், வாந்தி வருவது போல் இருக்கும். மாதவிடாய் வருவது போன்ற உணர்வும் ஏற்படும்; காலை நேரங்களில் ஏற்படும் இவ்வுணர்வே ஆங்கிலத்தில் 'மானிங் சிக்னெஸ்' என்றழைக்கப்படுகிறது.

## கர்ப்பிணிகள் மல்லாக்கப் படுக்கக் கூடாதா?

கண்டிப்பாக கூடாது. குழந்தையின் எடை, தாயின் ரத்தக்குழாய்களை அழுத்தினால், தாய்க்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படும், தாயின் மூச்சுக் காற்று அளவு குறையும்போது, அது குழந்தையின் உடலையும் தாக்கும். எனவேதான், கர்ப்பிணிகள் ஒருக்களித்த நிலையில் படுக்க வேண்டும் என, மருத்துவர்கள் வலியுறுத்துகின்றனர்.



## கர்ப்பிணிகள் உடற்பயிற்சி செய்யலாமா?

சில குறிப்பிட்ட உடற்பயிற்சிகளை மருத்துவரின் ஆலோசனையின்படி செய்யலாம். எளிமையான வீட்டு வேலைகளை செய்வதே ஒரு பயிற்சிதான். எனினும் சுகப்பிரசவம் ஆக, மூச்சுப்பயிற்சி மற்றும் எளிமையான யோகாசனங்கள் கைகொடுக்கும்.

# முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம்



இத்திட்டம், தமிழ்நாடு அரசின் ஒரு மிக முக்கியமான திட்டமாகும். அனைவருக்கும் தரமான மருத்துவம் மற்றும் அதிநவீன மருத்துவ வசதிகளை அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் மூலமாக தேவைப்படும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஆண்டு வருமானம் ரூ.72,000 மற்றும் அதற்கு குறைவாக உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இலவச மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை வழங்குவதற்காக தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்ட இந்த காப்பீட்டுத் திட்டம், சென்னையை தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வரும், 'யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்' பொதுத்துறை காப்பீட்டு நிறுவனம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் நான்கு ஆண்டுகளுக்கு, ரூபாய் நான்கு இலட்சம் வரை செலவிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த புதிய திட்டத்தில், 1,016 வகையான சிகிச்சை முறைகள் 23 முக்கிய பரிசோதனைகள் மற்றும் 113 தொடர் சிகிச்சைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் குறிப்பிட்ட 77 நோய் வகைகளுக்கு ரூ.1.5 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.**

இதுவரை, தமிழ்நாட்டில் 1.30 கோடி காப்பீடு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் பயனாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை செலவு அனைத்தையும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகள் உட்பட 769 மருத்துவமனைகள் சிகிச்சை அளிக்க இத்திட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 64 வகையான சிகிச்சை முறைகள் பிரத்யேகமாக அரசு மருத்துவமனைகளில் மட்டும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் 24.02.2015 வரை 9.75 இலட்சம் பயனாளிகள் ரூ.2,048.12 கோடி செலவில் பயனடைந்துள்ளனர். இதில், அரசு மருத்துவமனையில் மட்டும் 3.91 இலட்சம் பயனாளிகள் ரூ.740.41 கோடி காப்பீட்டுத் தொகை மூலமாக பயனடைந்துள்ளனர்.

# செய்தித்தாள்கள் பார்வையில்...



மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் நகராட்சி அலுவலகத்தில் இந்திய மருத்துவ சங்கத்தைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவர்களுடன் வைரஸ் காய்ச்சல் ஒழிப்பு குறித்த ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. இராஜேந்திரபாலாஜி மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மரு. சி. விஜயபாஸ்கர் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு. கோபால்சாமி எம்.எல்.ஏ., சுகாதாரத் துறை செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் மரு. கீதாலட்சுமி, இந்திய மருத்துவ சங்க தலைவர் மரு. கோதண்டராமன், செயலாளர் திரு. ஜவகர்லால் மற்றும் அனைத்து துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள உயர் பன்னோக்கு சிறப்பு மருத்துவமனையில், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் தலைமையில் மருத்துவ கல்வி முதல்வர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அரசு சிறப்பு செயலர் முனைவர் ப. செந்தில்குமார் மற்றும் மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் கீதாலட்சுமி ஆகியோர் உள்ளனர்.

## மெரீனாவில் இன்று முதல் 108 ஆம்புலன்ஸ் சேவை

சென்னை, பிப். 11: சென்னை மெரினா கடற்கரைப் பகுதியில் 108 ஆம்புலன்ஸ் சேவை வியாழக்கிழமை முதல் தொடங்கப்படவுள்ளது.

மலைப் பகுதியில் செல்வதற்கென்று பிரத்யேக முறையில் தயாரிக்கப்பட்ட 78 ஆம்புலன்ஸ் வாகனங்களை இயக்குவதற்கு தமிழக அரசு முடிவு செய்தது. முதல் கட்டமாக 30 வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. அடுத்த கட்டமாக செயல்பாட்டுக்கு வரவுள்ள 48 வாகனங்களை மலைப் பகுதிகளுக்கும், கடலோரக் கிராமங்களுக்கும் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறப்பு வாகனம்: சாதாரண




மெரினா கடற்கரையில் வியாழக்கிழமை முதல் இயக்கப்பட உள்ள சிறப்பு 108 ஆம்புலன்ஸ் வாகனம்.



சேலம் அரசு மருத்துவமனையில் அமைச்சர்கள் எடப்பாடி கே. பழனிச்சாமி, டாக்டர் சி. விஜயபாஸ்கர் ஆகியோர் திடீர் ஆய்வு மேற்கொண்டு பச்சிளங் குழந்தைகளின் உடல்நலம் குறித்து கேட்டறிந்தனர். உடன் மேயர் சவுண்டப்பன், மருத்துவத் துறை இயக்குநர் கீதாலட்சுமி மற்றும் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

# Helpline staff to the rescue of students

As exams loom, 104 helpline has come out with tips for stressed children, parents

FIGHTING FATIGUE

COUNSELLORS ARE SUGGESTING A SERIES OF MEASURES TO STAY DE-STRESSED THIS EXAM SEASON



75 வயது முதியவருக்கு வயிற்றில்

# வீக்கமடைந்த ரத்தநாள பகுதியில் நவீன ஊசித்துளை ஆபரேஷன்





மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ... நேற்று 28.2.2015 ... அரசு மருத்துவக்கல்லூரி ... அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் ... ஆய்வு செய்தார். உடன் முதன்மை செயலர், ...


# நோய் வராமல் தடுப்பது எப்படி?



என்ன செய்ய வேண்டும்?

## Health Helpline

The Hon'ble Chief Minister inauguarated the '104' health helpline cum Telemedicine service – a 24x7 facility, from 30.12.2013 aimed at providing free access to health information, health guidance and grievance redressal facility.




**8,20,503 calls**

**have been received in '104' health helpline from public across the state as on 31st January 2015.**



## The Following services are provided in '104' health helpline

- Health advice and health information through paramedics and MBBS doctors.
- Round the clock (24x7) emergency services like prior information to health facilities about mass casualties, transfer of high risk antenatal mothers, linkage with '108' emergency services.
- Redressing Service Improvement Requests (SIRs) by linkage with heads of health facilities, especially deficiencies in health services.
- Addressing citizens' views and suggestions with regard to further improving the service delivery in medical institutions.
- Counselling on health issues like nutrition, family welfare, HIV/AIDS, depression, suicide prevention etc.,
- Epidemic intelligence services on 24x7 basis.

Government have provided Closed User Group (CUG) mobile phoes to 2,580 officers of Primary health Centres, Government Medical College Hospitals, District level Joint Directors and Deputy Directors of Health Services and District Collectors to follow up on complaints, if any, on deficiency in health services.

# குடற்புழு நீக்கம்
## ஏன் அவசியம்?

**நாடு தழுவிய குடற்புழு நீக்க நாள் வாரம் இருமுறை பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் அனைத்து அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகள், அங்கன்வாடி மையங்களில் நடைபெறுகின்றது.**

### குடற்புழு பாதிப்பு சுழற்சி

குடற்புழு தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர் திறந்த வெளியில் மலம் கழிக்கும்போது புழுக்களின் முட்டைகள் மண்ணில் கலந்து வளர்கின்றன.



அசுத்தமான கைகள், சுகாதாரமற்ற உணவிகள் உட்கொள்ளுதல், தோலின் வழியாக புழுக்கள் உடலினுள் உட்செல்கிறது.

முட்டைகள் மற்றும் சிறு புழுக்கள் குடலில் வளர்ச்சி பெற்று முதிர்ந்த புழுக்களாகி உடல்நலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

### புழுத்தொற்றினால் ஏற்படும் பாதிப்புகள்

- ஊட்டச்சத்து குறைபாடு, சோர்வு மற்றும் சுகவீனம்
- பசியின்மை
- இரத்த சோகை
- குமட்டல், வாந்தி
- வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு



அஸ்பெண்டசோல் மருந்து மூலம் குடற்புழு தொற்றிலிருந்து விடுபடலாம்

## குடற்புழு பாதிப்பை தடுக்கும் வழிமுறைகள்

- உணவு உட்கொள்வதற்கு முன் கைகளை சோப்பு போட்டு நன்றாக கழுவுதல்
- காய்கறிகள் மற்றும் பழங்களை கழுவிய பின் உட்கொள்ளுதல்
- பாதுகாப்பான கொதித்து ஆற வைத்த நீரை பருகுதல்
- காலணிகளை அணிதல்
- நகங்களை வெட்டி சுத்தமாக வைத்து கொள்ளுதல்
- சுகாதார கழிவறைகளை பயன்படுத்துதல், திறந்த வெளியில் மலம் கழித்தலை தவிர்த்தல்.
- மலம் கழித்த பின்பு கைளை சோப்பு போட்டு நன்றாக கழுவுதல்
- சுற்றுப்புறங்களை சுத்தமாக வைத்து கொள்ளுதல்

## குடற்புழு நீக்கத்தினால் குழந்தைகளுக்கு ஏற்படும் நன்மைகள்

- இரத்தசோகையை தடுக்கிறது
- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து சுறுசுறுப்பாக இருக்க உதவுகிறது
- அறிவுத்திறன் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்தவும், ஆரோக்கியமாக இருக்கவும் உதவுகிறது.
- குழந்தைகள் நாள்தோறும் பள்ளிக்கு வருவது அதிகரிக்கிறது

## பள்ளி அளவில் அல்பெண்டசோல் மாத்திரைகள் வழங்குதல் (1 முதல் 12வது வகுப்பு வரை)




- 1முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ½ மாத்திரை (200mg) அல்லது 5ml syrup (200mg)
- 2 வயதிற்குமேல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 10ml syrup (400mg)
- 2 முதல் 19 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு 1 மாத்திரை அல்பெண்டசோல் (400 mg) வழங்கப்படவேண்டும்

## சாப்பிடும் முறை



குழந்தைகளுக்கு அல்பெண்டசோல் மாத்திரை கொடுத்து நன்றாக சப்பி மென்று சாப்பிடுவதற்கு அறிவுறுத்தி பார்வையிட வேண்டும்

குழந்தைகள் மாத்திரைகளை மென்று உட்கொள்ளுதல் மற்றும் சுத்தமான குடிநீர் வசதி இருப்பதை உறுதி செய்ய வேண்டும். சிறு குழந்தைகளுக்கு மாத்திரைகளை பொடியாக்கி நீரில் கரைத்து கொடுக்க வேண்டும்.



தேசிய குடற்புழு நீக்க நாள் அனறு வருகை பதிவேட்டில் மாத்திரைகள் உட்கொண்ட குழந்தைகளின் பெயருக்கு நேராக ஒரு டிக் ( ✔ ) குறியீடு இடவேண்டும்.



விடுபட்ட குழந்தைகளுக்கு அடுத்து வரும் நாட்களில் அல்பெண்டசோல் மருந்து வழங்கிய பின் வருகை பதிவேட்டில் குழந்தைகளின் பெயருக்கு நேராக இரு டிக் ( ✔ ✔ ) குறியீடு இடவேண்டும்



## பக்க விளைவுகள் ஏற்படுமாயின் செய்ய வேண்டிய வழிமுறைகள்

அனைத்து வயதினருக்கும் அல்பெண்டசோல் மாத்திரை பாதுகாப்பானது

### இலேசான சிறு பாதிப்புகள்


அதிகமாக குடற்புழு இருக்கும் குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க மருந்து உட்கொள்ளும் போது இலேசான மயக்கம், குமட்டல், வாந்தி, தலைவலி மற்றும் வயிற்று வலி போன்ற பொதுவான பக்கவிளைவுகள் ஒரு சிலருக்கு ஏற்படலாம். குழந்தையை திறந்தவெளி மற்றும் காற்றோட்டமான நிழல் பகுதியில் அமைதியாக படுக்கவைக்கவும்



சுத்தமான குடிநீர் மற்றும் உப்பு சர்க்கரை கரைசல் (ORS) கொடுத்து கண்காணிப்பில் வைக்கப்பட வேண்டும்.

பக்கவிளைவின் அறிகுறிகள் அதிகமானாலோ (அ) தொடர்ந்து இருந்தாலோ அருகிலுள்ள கிராம சுகாதார செவிலியர் மற்றும் ஆரம்ப சுகாதார மையத்தை தொடர்பு கொள்ளவும்.


ஆரம்ப சுகாதார நிலையத்தின் தொலைபேசி எண், மருத்துவ அலுவலர் மற்றும் கிராம சுகாதார செவிலியர் கைபேசி எண் ஆகியவற்றை பள்ளியில் எழுதி ஒட்டி வைத்திருக்க வேண்டும்.



## முக்கிய அறிவுரைகள்

- பள்ளி குழந்தைகளுக்கு 400 மில்லிகிராம் கொண்ட அல்பெண்டசோல் 1 மாத்திரை வழங்கவேண்டும்.
- குழந்தைகள்/ வளர் இளம் பருவத்தினர் நோய்வாய்ப்பட்டிருக்கின் மாத்திரைகள் வழங்க வேண்டாம். குணமடைந்த பிறகு மாத்திரை வழங்கலாம்.
- பள்ளி செல்லா குழந்தைகள் அருகிலுள்ள அங்கன்வாடி மையத்தில் அல்பெண்டசோல் மாத்திரைகள் வழங்கப்படும்.







## முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு திட்டத்தால்

# ஏழைத் தொழிலாளிக்கு மிக அரிதான ரத்தநாள அறுவை சிகிச்சை



மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் திருவண்ணாமலையை சேர்ந்த கூலித் தொழிலாளி பழனி என்பவருக்கு சென்னை அரசு பொது மருத்துவமனையில் மிகவும் அரிதான அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது. உடன் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் ஆர். விமலா மற்றும் உறுப்பு மாற்றுத் துறை பேராசிரியர் டாக்டர் அமலோற்பவநாதன் உள்ளனர்.

பழனி என்கிற 54 வயது நோயாளி திருவண்ணமாமலையைச் சேர்ந்தவர். தனது காலில் வலி எற்பட்டு, மிகுந்த சிரமத்தோடு சென்னை அரசு பொது மருத்துவமனை இரத்த நாள அறுவை சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

பரிசோதித்துப் பார்த்ததில் பெரிய தமனி **(Aorta)** யிலிருந்து காலிற்குப்போகும் இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டது. அவருக்கு உடல் முழுவதும் பன்றி நாடாப் புழு நோய் சுண்ணாம்புப் படிவங்கள் இருப்பது தெரியவந்தது. சிடிஸ்கேன் மூளைக்கு எடுத்து பார்த்ததில் அதிலும் அவருக்கு அந் நோயின் தாக்கம் இருப்பது தெரியவந்தது.

அத்தகைய சவாலான நோயினைக் குணப்படுத்துவதற்காக பேராசிரியர் அமலோர்ப்பவநாதன், துணைப் பேராசிரியர் கே.இளஞ்சேரலாதன் தலையில் இரத்த நாள அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.
இந்த நோயின் முக்கியத்துவம் என்னவென்றால் ஒரு சுண்ணாம்புப் படிவம் உடைந்தாலும் உடல் அழற்சி ஏற்பட்டு, உயிருக்கே உடனடியாக ஆபத்து ஏற்படும். இதை அறிந்து, ஆல்பென்டஸோல் போன்ற மருந்துகளின் துணையோடு Aorto Femoral பைபாஸ் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு அவருடைய காலும், உயிரும் காப்பாற்றப்பட்டு நோயாளிக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு குணமாக்கப்பட்டார்.

இவ்வாறு இந்த ஆபத்தான, பிரச்சினைகள் நிறைந்த அறுவை சிகிச்சை செய்யாமல் இருந்திருந்தால் அவரது கால்களை அவர் இழக்க நேர்ந்திருக்கும்.

இந்த சிகிச்சைக்கு தனியார் மருத்துவ மனைகளில் சில லட்சம் ரூபாய் செலவாகும் வேளையில், அரசு பொது மருத்துவமனை, சென்னையில் முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தினால் செலவேதுமின்றி சிகிச்சை அளிக்கப்பட்டது.


*Published By : Health and Family Welfare Department, Government of Tamil Nadu.*
*Printed by : Punnagai, Brindavan House, #258, Ammayi Ammal Street, Amainthakarai, Chennai - 29.*

# எதிரொலி



தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிடும் அனைவருக்கும் நலவாழ்வு என்ற மாத இதழைப் படித்தேன். மிகவும் மகிழ்ச்சிடைந்தேன். ஒரு குறிப்பிட்ட அரசுத் துறையின் கீழ் பணியாற்றும் அனைத்து அதிகாரிகளும், ஊழியர்களும் ஒருமித்த புரிதலைப் பெறுவதற்கு இத்தகைய துறைசார்ந்த இதழ் ஒரு மிகச் சிறந்த முன்மாதிரியாகும். அரசுத் துறையினர் மட்டுமின்றி, பொதுமக்களும் புரிந்துகொள்ளும் வகையிலான ஆலோசனை நேரம், பற்கள் பாதுகாப்புக்கான வழிகாட்டுதல் போன்றவை மிகவும் பயனுள்ளவை. இந்த முன் முயற்சி வெற்றிபெற என் வாழ்த்துக்கள்.

**திரு. K.ராஜேந்திரன், நிர்வாக இயக்குநர்**
ரெப்கோ வங்கி, தலைமையகம், சென்னை

---



தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பாக ஜனவரி 2015-ல் வெளிவந்துள்ள அனைவருக்கும் நலவாழ்வு என்கிற மாத இதழ் ஒரு தாயின் பரிவோடு மருத்துவ தகவல்களை நாட்டு மக்களுக்கு தந்துள்ளது. அரசு மருத்துவ நிலையங்கள் குறித்த தகவல் அடித்தட்டு மக்களையும் சென்றடையும் வண்ணம் பல வண்ணங்களில் உள்ள இந்த புத்தகம் படித்து பிரமித்துப் போனேன். தமிழக அரசால் வழங்கப்படும் மருத்துவம் மற்றும் சேவைகள், தற்போதைய திட்டங்கள் போன்ற பயனுள்ள மருத்துவக் கட்டுரைகள் அற்புதம். இது ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய ஒரு மருத்துவ கையேடு என்று சொன்னால் மிகையல்ல.

**திரு. எம். செந்தில்குமார், தலைவர்**
இந்திய பிசியோதெரபி மருத்துவ சங்கம், சேலம்.

---



நோயுற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆரோக்கியமான உடலை அனைவரும் பேணுவதற்குப் பாடுபடுபவர்கள் மருத்துவர்கள். மருத்துவர்களுக்கும், மருத்துத் துறை ஊழியர்களுக்கும் சுகாதாரத் துறை தகவல்களையும், திட்டங்களையும் எடுத்துரைக்கும் நல்வாழ்வு என்ற மாத இதழ் மிகவும் அருமையான வடிவமைப்புடனும் தரத்துடனும் வெளிவருகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இத்துறையின் தலைமைப் பொறுப்பில் உள்ள அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. D.C. இளங்கோவன், தாளாளர்.**
ஸ்ரீ விஜய் வித்யாலயா கல்விக் குழுமம்

---



மக்களின் நலவாழ்வு மீதான அரசின் அக்கறையை அனைவரும் அறிந்து பயன்பெறும் வகையில் வெளியிடப்படும் 'அனைவருக்கும் நலவாழ்வு' மாத இதழ் மிகவும் பயனுள்ள ஓர் புதிய முயற்சி. இதுபோன்ற பயனுள்ள பதிவுகளும், பதிப்புகளும் என்றும் தொடர. தமிழக 'மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு' வாழ்த்துக்கள்.

**திரு. R. கோபாலகிருஷ்ணன்**
**Managing Partner, Yali Media.**

# இன்ஃப்ளுயன்சா A(H1N1)
# (பன்றிக் காய்ச்சல்)

## தடுக்கும் முறைகள்



இருமும் போதும்,
தும்மும் போதும்
உங்கள் வாய் மற்றும்
மூக்கை கைக்குட்டை
அல்லது துணியால்
மூடிக் கொள்ளுங்கள்



உங்களுக்கு
காய்ச்சல், இருமல்
மற்றும் தொண்டை
வலி போன்ற
அறிகுறிகள் தென்பட்டால்,
உடனே அருகில் உள்ள
மருத்துவரை அணுகவும்



உங்கள் கைகளை
அடிக்கடி சோப்பு
போட்டு நன்கு
கழுவுங்கள்



ஃப்ளு காய்ச்சல்
அறிகுறி இருப்பின்,
பள்ளி, பணி மற்றும்
பொது இடங்களுக்கு
செல்வதை தவிர்க்கவும்



இருமல் மற்றும்
தும்மலின் போது
பயன்படுத்திய கைக்குட்டை
மற்றும் இதர துணிகளை
நன்கு துவைத்து
வெயிலில் காய வைத்து
பயன்படுத்தவும்



ஃப்ளு காய்ச்சல்
அறிகுறி தென்படின்,
மற்றவர்களிடம் இருந்து
சுமார் 1 மீட்டர்
இடைவெளி விட்டு விலகி,
நோய் பரவலை
தவிர்க்கவும்



கைகளைக் கழுவாமல்
மூக்கு, வாய்
மற்றும் கண்களை
தொடாதீர்கள்



ஃப்ளு காய்ச்சல்
அறிகுறி இருந்தால்
மற்றவர்களிடம்
கை குலுக்குதல்
மற்றும் தழுவுதலை
தவிர்க்கவும்

- மருத்துவர் பரிந்துரை இல்லாமல் மருந்து உட்கொள்வதை தவிர்ப்போம்.
- நோய் அறிகுறி தென்பட்டால் மருத்துவரை உடனடியாக அணுகவும்.

**அவசர உதவிக்கு**
**24 மணி நேர கட்டுப்பாட்டு மையம்**
**044-24350496 / 044-24334811**
**9444340496 / 9361482899**

கூடுதல் தகவல்களுக்கு 104 மருத்துவ உதவி